**செய்தி வெளியீடு எண்: 367** **நாள்: 28.05.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (28.5.2020) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் நீர்வள ஆதாரத் துறை சார்பில் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களின் வழியாக செல்லும் நொய்யல் ஆற்று அமைப்பில் சரகம் 0.0 கி.மீ முதல் 158.35 கி.மீ வரை விரிவாக்குதல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் 230 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், பொதுப்பணித் துறை சார்பில் 16 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நிறைவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 17 கோடியே 1 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், புதிய நீராதாரங்களை உருவாக்கிடவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, நீர்வள ஆதாரத் துறை மூலமாக பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களின் வழியாக செல்லும் நொய்யல் ஆற்று அமைப்பில் சரகம் 0.0 கி.மீ முதல் 158.35 கி.மீ வரை உள்ள அணைக்கட்டுகள், குளங்கள், ஆறு மற்றும் கால்வாய்களை விரிவாக்குதல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், 230 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம், நொய்யல் ஆறு சீரமைவதுடன் 18 அணைக்கட்டுகள், 22 முறைசார்ந்த குளங்கள், சிதிலமடைந்த அணைக்கட்டு பகுதிகள், வாய்க்கால்கள், மணல் போக்கியின் மதகுகள், விவசாய நிலங்களுக்கு பிரிந்து செல்லும் வழங்கு வாய்க்காலின் மதகுகளை செப்பனிடுதல், நீர்வரத்து ஓடைகளை புதுப்பித்தல், ஓடைகளில் உரிய தடுப்பணைகளை ஏற்படுத்துதல், குளங்களின் கரைகளை பலப்படுத்துதல், தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு

சுமார் 7,000 ஏக்கர் விவசாய நிலங்கள் நேரடியாகவும், 11,000 ஏக்கர் விவசாய நிலங்கள் மறைமுகமாகவும் பயனடையும்.

மேலும், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், தெள்ளூர் கிராமத்தின் அருகே செய்யாற்றின் குறுக்கே 5 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள தடுப்பணை;

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சின்னாரம்பட்டி கிராமத்தின் அருகே பாம்பாறு ஆற்றின் குறுக்கே 2 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள தடுப்பணை;

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், கருங்காலி கிராமத்தின் அருகே அகரம் ஆற்றின் குறுக்கே 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள தடுப்பணை;

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், கொம்பேரிபட்டி கிராமம், மம்மானியூர் குக்கிராமம் அருகில் கன்னிமார் ஓடையின் குறுக்கே 1 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கசிவுநீர் குட்டை;

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆமந்தகடவு கிராமத்தில் புல எண். 135–இல் உப்பாறு ஓடையின் குறுக்கே 1 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள தடுப்பணை;

என மொத்தம் 16 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், கண்டியூர் கிராமத்தில் வெட்டாற்றின் குறுக்கே தொலைகல் 102.17 கி.மீ–இல் 1 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான செல்லூர் அணைகட்டை புனரமைத்தல்;

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், அமராவதி கிராமத்தில் வெட்டாற்றின் குறுக்கே தொலைகல் 95.63 கி.மீ–இல் 1 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மாத்தூர் படுகை அணையை புனரமைத்தல்;

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், ஊத்துக்காடு கிராமத்தில் வெட்டாற்றின் குறுக்கே மைல் 53/3–4–இல் 2 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஊத்துக்காடு நீரொழுங்கியை புனரமைத்தல்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமம், பாலாறு குடியிருப்புக்கு அருகே பாலாற்றின் குறுக்கே 3 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை;

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், ஆர்.கோம்பை கிராமம், தொப்பையசாமிமலை ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல் மற்றும் வழங்கு கால்வாய் மூலம் வடுகம்பாடி பெரியகுளம் மற்றும் இதர 9 எண்ணிக்கையிலான குளங்களுக்கு 5 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீர் வழங்குதல்;

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், பிச்சனூர் கிராமம் க.ச.எண். 696–ல் குமிட்டிபதி ஆற்றின் குறுக்கே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை;

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், மதுக்கரை மார்க்கெட், ஏ.சி.சி. சிமெண்ட் தொழிற்சாலை பாலத்திற்கு அருகில் மஞ்சுபள்ளத்தின் குறுக்கே 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை;

என மொத்தம் 17 கோடியே 1 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., நீர்வள ஆதாரத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் (பொது) திரு. கு. இராமமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**